

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் வடக்கு ஒன்றியம் விநாயகநந்தல் ஊராட்சியில் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் மாணவர் அணி சேர்க்கை படிவத்தை மாணவரணி நிர்வாகிகளிடம் வழங்கினார்.



திருப்பூர் மத்திய மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அ.ஆனந்தி இல்ல திருமண வரவேற்பு விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், டிகேடி மு.நாகராசன், நாமக்கல் ப.இராணி, செ.உமாமகேஸ்வரி, நா.மாலதி நாகராஜ், மேங்கோ அ.பழனிச்சாமி, சி.கோவிந்தசாமி, பி.ஆர். செந்தில்குமார், செ.திலகராஜ், ப.கலைச்செல்வி உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### குண்டு துளைக்காத வாகனத்தில் இருந்து – மாற்று வாகனத்தில்

# ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா பயணம் செய்த நிகழ்வு!

## தமிழ்நாடு காவல்துறை விளக்கம்!

சென்னை, மே.6-

ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா பயணம் செய்த குண்டு துளைக்காத வாகளத்திலிருந்து மாற்று வாகணத்தில் பயணம் செய்தது குறித்த அறிக்கை வருமாறு :-

ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சரும் மற்றும் பா.ஜ.க. தேசியத் தலைவருமான ஜே.பி.நட்டா அவர்கள் மத்திய பாதுகாப்பு படையினருடன் கூடிய Z+ பாதுகாப்பு பிரிவு உடையவராவார். அவர் 02.05.2025 அன்று சென்னைக்கு வருகிறார் என்ற தகவல் அறிந்ததும் அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்பட்டது. அதன்படி அவருக்காக குண்டு துளைக்காத வாகனமும் மற்றும் அவருடன் மத்திய பாதுகாப்புப் படையினர் பயணிப்பதற்காக இரண்டு வாகனங்களும். தமிழ்நாடு பாதுகாப்புப் படையினர் பயணிக்க மூன்று வாகனங்களும், ஒரு நோயாளர் ஊர்தி (AMBULANCE) மற்றும் அரசு மரபு வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டது.

2) இத்தகைய குண்டு துளைக்காத வாகனங்கள், ஒன்றிய அரசினால் பரிந்துரைக்கப்பட்ட பணிமனைகளில் தயாரிக்கப்பட்டு பாதுகாப்புப்பிரிவின் பயன்பாட்டில் நல்ல முறையில் இயங்கிவருகின்றன. இத்தகைய வாகனங்கள், தொழில்நுட்பக் காரணங்களால் அதிவேகமாக செல்லக்கூடாது என நிபந்தனைகள் உள்ளன.

3) 03.05.2025 அன்று காலை SRM பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற... வது சைவ சித்தாந்த மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு மதியம் அங்கிருந்து புறப்பட்டு வேலூர் பொற்கோயிலுக்குச் சென்று பின்னர் இரவு 8.40 மணிக்கு சென்னையிலிருந்து டெல்லி பயணிப்பதற்காக மாலை 5.30 மணியளவில் வேலூரிலிருந்து புறப்பட்டு ஒன்றிய அமைச்சர் சென்னை திரும்பினார். இரவு 07.30 மணியளவில், தாம்பரம் மாநகரம் எல்லைக்குட்பட்ட வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்டச் சாலையில் திருமுடிவாக்கம் அருகில் வந்து கொண்டிருந்தனர். குண்டு துளைக்கமுடியாத வாகனங்கள் அதிக எடை கொண்டவை என்பதாலும், தொழில்நுட்பக் காரணங்களுக்காகவும் இவற்றை மற்ற வாகனங்களின் வேகத்திற்கு இணையாக இயக்குவதில்லை. ஆனால், ஒன்றிய அமைச்சரின் நேர்முக உதவியாளரின் வற்புறுத்தியதின் பேரில், வாகனங்கள் மணிக்கு 120 கிமீக்கும் அதிகமான வேகத்தில் இயக்கினர். அதனால் குண்டு துளைக்காத காரினை மற்ற வாகனங்களுக்கு இணையான வேகத்திற்கு இயக்க முற்பட்ட பொழுது. பின்பக்கச் சக்கரத்தில் உருவான உராய்வு சத்தத்தினை அறிந்து அத்த கவலைக் கூறிவிட்டு, ஒட்டுநர் அவ்வாகணத்தை ஒன்றிய அமைச்சரின் பாதுகாப்பினைக் கருதி வாகனத்தில் வேகத்தைக் குறைத்து சாலை நரத்தில் நிறுத்தினார். உடனடியாக ஒன்றிய அமைச்சர் அவர்களை அரசு மரபின்படி வழங்கப்பட்ட மாற்று வாகனத்தில் ஏற்றி, உரிய பாதுகாப்புடன் சென்னை விமானநிலை யத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டார். இதில் அமைச்சர் பயணம் செய்த வாகனத்திற்கு எவ்வித சேதமோ அதன் உள்ளிருந்தவர்களுக்கு எவ்வித பாதுகாப்பு குறைபாடோ ஏற்படவில்லை. ஒன்றிய அமைச்சர் பயணம் செய்த குண்டு துளைக்காத வாகனம் உடனடியாக நிறுத்தப்பட்ட பொழுது அவரது உடைமைகளை பின்னால் எடுத்து வந்த எட்டாவது நிலையிலிருந்த வாகனத்தின் மீது பத்தாவது நிலையிருந்த பாதுகாப்பு வீரர்களின் வாகனம், பின்புறத்தில் வந்து உரசி நின்றது. இதனால்... வது வாகனத்தின் இடது பின்புறம் மற்றும் 10வது வாகனத்தின் வலது முன் பகுதியில் மிகக் குறைந்த சேதம் எற்பட்டது.

4) மிக முக்கிய விருந்தினர்களுடன் பயணிப்பவர்கள், வாகனத்தின் வேகத்திறனுக்கு அதிகமான வேகத்தில் வாகனங்களை இயக்க வற்புறுத்த வேண்டாமென அறிவுறுத்தல் செய்யப்பட்டதுடன், வாகனத்தின் வேகத்திறனுக்கும் கூடுதலான வேகத்தில் இயக்க கூடாதென காவல் துறையினருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

5) தமிழக காவல்துறையில் பாதுகாப்பு பிரிவில் உள்ள குண்டு துளைக்காத வாகனங்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருவதால் அண்டை மாநிலங்களான பாண்டிச்சேரி, கர்நாடகா, ஆந்திரா மற்றும் கேரளாவிற்கு முக்கிய விருந்தினர்கள் வரும்பொழுது அவர்களின் வேண்டுகோளின்படி. இவ்வாகனங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு காவல் துறையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தண்டலம் கிராமத்திலிருந்து திருவள்ளூர் வரை

# புதிய பேருந்து வழித்தடம்!

## வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், மே 6:

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கடம்பத்தூர் ஒன்றியம், தண்டலம் ஊராட்சியில் 500 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இந்த ஊராட்சியில் இருந்து பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவ, மாணவிகள், வேலைக்கு செல்பவர்கள் மணவாளநகர், திருவள்ளூர், ஶ்ரீபெரும்புதூர் ஆகிய பகுதிகளுக்கு செல்ல வேண்டும் என்றால் கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் தூரம் நடந்துசென்று மேல்நல்லாத்தூர் பகுதிக்கு வந்து அங்கிருந்து தான் பேருந்து மூலம் செல்ல வேண்டிய நிலை இருந்து வந்தது. இதனால் காலை, மாலை நேரங்களில் பேருந்து வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என பொதுமக்கள் தொடர்ந்து திருவள்ளூர் தொகுதி எம்எல்ஏ வி.ஜி.ராஜேந்திரனிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். இதனையடுத்து பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று புதிய பேருந்து வழித்தடத்தை துவக்கி வைக்கும் விழா நேற்று நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக திருவள்ளூர் பணிமனை கிளை மேலாளர் பாஸ்கர் தலைமை தாங்கினார். திமுக மாவட்ட அவைத் தலைவர் திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன், ஒன்றிய நிர்வாகிகள் ராஜசேகர் வழக்கறிஞர் நாகராஜ், கொப்பூர் திலீப்குமார், மோகனசுந்தரம், முன்னாள் ஊராட்சி தலைவர்கள் டி.பி.ரவிச்சந்திரன், ஏழுமலை, மணி மற்றும் விக்கிரமாதித்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி.ஆர்.பிரபாகரன் வரவேற்றார்.

விழாவில் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்து கொண்டு புதிய பேருந்து வழித்தடத்தை தொடங்கி வைத்தார். பொது மக்களின் கோரிக்கையை ஏற்று இந்த பேருந்து வசதி ஏற்படுத்தி தரப்பட்டுள்ளன. இதில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம். பொது மக்கள் இந்த பேருந்து சேவையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எம்எல்ஏ கேட்டுக்கொண்டார்.

இதில் திமுக நிர்வாகிகள் வி.எஸ்.நேதாஜி, மதியழகன், சத்யா, சேகர், பெருமாள், ஜார்ஜ், சேகர், பகவதிராஜா, தாமோதரன், ரமேஷ், சுதாகர், எல்லப்பன், முருகன், கிராம நிர்வாகிகள் ஞானசம்பந்தம், வீரமணி, தங்கமணி, சுப்பிரமணி சாமியார், வேலு, கந்தன், சுதாகர், நந்தகோபால், ஜெகநாதன், சகாதேவன், வீரராகவன், உதயகுமார், ஜீவன், ராஜா, ஏழுமலை, கீதா ஜோசப் முனுசாமி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை தெற்கு மாவட்டம்

## மதுரவாயல் தெற்கு பகுதி 152வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 152வது வட்டச் செயலாளர் எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி அவர்கள்மீது, நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, திரு. **ஜெ.பாஸ்கரன்,** (16, கலைஞர் தெரு, வளசரவாக்கம், சென்னை 600087) அவர்கள் 152வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்: 05-05-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில்

# தமிழ்நாடு முழுவதும் மண்டல அளவில் முப்பெரும் விழா!

## மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

கிருஷ்ணகிரி, மே 6 -

தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மாண்புமிகு முதல்வர் தளபதியார் பிறந்த நாள் முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா மிக எழுச்சியோடு கொண்டாடப்படுகிறது.

அதனை ஒட்டி மாநில அமைப்புசரா ஓட்டுநர் அணி செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான டி. செங்குட்டுவன் விடுத்துள்ள அறிக்கையில் நாளை ( 07.05.2025 ) நேரம் காலை 10.00 மணி அளவில் மண்டலம் 1 சார்பில் திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை ஐந்தாவது வடக்கு பைபாஸ் ரோட்டில் உள்ள ஹோட்டல் அஃப்னா பார்க்கில்

மண்டலம் 1ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள்

கன்னியாகுமரி 2, திருநெல்வேலி 2, தென்காசி 2, விருதுநகர் 2, தேனி 2, திருநெல்வேலி மாநகர் 1, சிவகாசி மாநகர் 1, நாகர் கோவில் மாநகர் 1 உள்ளிட்ட மாவட்டங்கள் இடம்பெறுகின்றன. ( இதற்கு பொறுப்பாளராக எம்.சிவராஜ் செல் 9443141939 நியமிக்க ப்பட்டுள்ளார்)

மண்டலம் 2 நாள் 08.05.2025 காலை 10.00 மணி அளவில்

தூத்துக்குடி கலைஞர் அரங்கத்தில் மண்டலம் 2ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள் இராமநாதபுரம் 1, சிவகங்கை, 1 தூத்துக்குடி 2, மதுரை 2, திண்டுக்கல் 2, மதுரை மாநகர் மாவட்டம் 1, தூத்துக்குடி மாநகர் 1, திண்டுக்கல் மாநகர் 1 (இதற்கு பொறுப்பாளராக ,மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் ஏ.கே. பூபதி நியமிக்கபடுகிறார்) மண்டலம் 4 12.05.2025 அன்று காலை 10.00 மணி அளவில் கொங்கு வேளாளர் கலையரங்கம், சோமனூர், கருமத்தம்பட்டி, கோயமுத்தூரில் மண்டலம் 4 ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள் கோவை 3, நீலகிரி 1, திருப்பூர் 4, கரூர் 1, ஈரோடு 3, நாமக்கல் 2 கோவை மாநகர் மாவட்டம் 1, திருப்பூர் மாநகர் 1, ஈரோடு மாநகர் 1, கரூர் மாநகர் 1 (இதற்கு பொறுப்பாளர்கள் K.தினகரன் Ex.MLA செல் 9842275296, மற்றும் Dr. RCM விஷ்ணுபிரபு, செல் 9486019999 ஆகியோர் நியமிக்கபடுகின்றனர் )

மண்டலம் 5 , 13.05.2025 அன்று காலை 10.00 மணி அளவில் விழுப்புரத்தில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது மண்டலம் 5 ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள் கள்ளக்குறிச்சி 1, அரியலூர் 1, பெரம்பலூர் 1, கடலூர் 2, விழுப்புரம் 3, திருவண்ணாமலை 2, கடலூர் மாநகர் 1 இதற்கு பொறுப்பாளராக அருணகிரி செல் 9444400189, மற்றும் நெய்வேலிதங்கம் செல் 9884433366 மற்றும் கே. ஶ்ரீதர் செல் 9443712364 நியமிக்கப்படுகின்றனர் திருச்சி, தருமபுரி, சென்னை, பாண்டிச்சேரி மண்டலங்களில் நடைபெறும் முப்பெரும் விழா தேதி பின்னர் அறிவிக்கப்படும் .

எனவே மாநில முழுவதும் எழுச்சியோடு நடைபெற உள்ள இவ்விழாவில் அமைப்புசாரா ஓட்டுநர் அணி உள்ள அனைவரும் தவறாமல் பங்கேற்று விழாவை சிறப்பாக நடத்தி கொடுக்குமாறு மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில் திராவிட மாடல் ஆட்சியின்

# 5 ஆம் ஆண்டு தொடக்க நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, மே 6 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டு தொடக்க நாள் மிகுந்த மகிழ்ச்சி நிறைந்த எழுச்சியுடன் கொண்டாடுவீர்.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.

நாடும்,ஏடும் போற்றும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டு தொடக்க நாள் நாளை (07.05.2025) ஆகும்.

தமிழ்நாட்டு மக்களுக்கும்,நம் திருநெல்வேலி மாவட்டத்திற்கும் எண்ணற்ற திட்டங்களை தந்து வரும் நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் ஆட்சி ஐந்தாம் ஆண்டு தொடக்க நாளாம் நாளை (07.05.2025) மிகச் சிறப்பாக மிகச் சிறப்பாக எழுச்சியுடன் கொண்டாடும் வகையில் நம் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு அனைத்திலும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி, நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடந்த கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த் பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றினார். அருகில் தெற்கு பகுதி தி.மு.க. செயலாளர் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பூஞ்சோலை சீனிவாசன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.சி.சுரேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி நகரம், எஸ்.கே.நவாப் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு,

கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 05.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 152வது வட்டத்தைச் சேர்ந்த எஸ். அப்பன் (எ) சத்தியமூர்த்தி அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்: 05-05-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# கண்ணீர் அஞ்சலி



தூத்துக்குடி மாவட்ட தி.மு.க. மூத்த உறுப்பினரும்
பேரறிஞர் அண்ணா, தமிழினத்தலைவர் கலைஞர்
ஆகியோருடன் இணைந்து கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடி

எழுத்தாளர்
திரு. புலவர் தீ.பொன்னுச்சாமி அவர்கள்

05.05.2025 திங்கள்கிழமை அதிகாலை இயற்கை எய்தினார்
என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது நல்லடக்கம் 06.05.2025 செவ்வாய்கிழமை
மாலை 4.00 மணியளவில் எண் 4/56 தனசேகர் நகரில் உள்ள
அன்னாரது இல்லத்தில் வைத்து நடைபெறும்.

தூத்துக்குடி மாநகர தி.மு.க
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க